தங்கள் மாவட்டத்திலுள்ள பள்ளி மாணவர்கள் அனைவரது செய்முறைத் தேர்வு மதிப்பெண்களும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதா என்பதை முதன்மைக் கல்வி அலுவலர் உறுதி செய்து கொள்ள வேண்டும். எந்த ஒரு மாணவரது மதிப்பெண்களும் பதிவேற்றம் செய்யப்படாமல் இருத்தல் கூடாது.

இணையதளம் வாயிலாக செய்முறைத் தேர்வு மதிப்பெண்களை பதிவேற்றம் செய்யும் பணி நிறைவடைந்த பின்பு, அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் தங்கள் மாவட்டத்திலுள்ள அனைத்து மேல்நிலைப் பள்ளிகளின் மேல்நிலை முதலாம் ஆண்டு செய்முறைத் தேர்வு மதிப்பெண் பட்டியல் கட்டுகளை (உரிய இணைப்புகளுடன்) பள்ளி எண் வாரியாக கட்டுகளாகக் கட்டி, தனிநபர் வாயிலாக **03.03.2020 அன்று சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.**

**மார்ச் 2019 / ஜூன் 2019 மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகளின் போது செய்முறை புறத்தேர்வில், பங்கேற்காத (Absent) தேர்வர்களுக்கு (+1 Arrear Candidates) செய்முறைத் தேர்வு நடத்துதல்:—**

மார்ச் 2019 மற்றும் ஜூன் 2019, மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகளின் போது, செய்முறை புறத்தேர்வில் பங்கேற்காத (Absent) கீழ்க்காணும் மூன்று (3) வகை தேர்வர்களுக்கு, **25.02.2020—க்குள் பள்ளி மாணாக்கருக்கான செய்முறைத் தேர்வு நடத்தப்படும் மையத்திலேயே செய்முறை புறத்தேர்வு நடத்தப்பட வேண்டும்.**

1. தங்கள் பள்ளியில் +1 பயின்று, தற்போது +2 பயிலும் மாணவர்கள்.
2. தங்கள் பள்ளியில் +1 பயின்ற பின், பள்ளி மாற்றுச் சான்றிதழ் (TC) பெற்று இடை நின்றவர்கள்.
3. வேறொரு பள்ளியில் +1 பயின்று, தற்போது தங்கள் பள்ளியில் +2 பயிலும் மாணவர்கள்

வேறொரு பள்ளியில் +1 பயின்ற மாணவர்களது, சம்பந்தப்பட்ட பாடங்களின் செய்முறை பதிவேடுகளை (+1 Record Book) பள்ளித் தலைமையாசிரியர் பெற்றுக் கொண்டு, செய்முறை புறத்தேர்வு நடத்தி மதிப்பெண்கள் வழங்கும் சமயம், செய்முறை பதிவேடுகளுக்கான மதிப்பெண்களையும், திறன் மதிப்பீட்டுக்கான மதிப்பெண்களையும் (3+2) வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**இம்மாணவர்களுக்கு செய்முறைத் தேர்வு நடத்தப்படும் தேதி மற்றும் இடத்தினை முன்கூட்டியே பள்ளித் தலைமையாசிரியர் தெரிவிக்க வேண்டும். மேலும், இவ்விவரத்தினை பள்ளி அறிவிப்பு பலகையிலும் ஒட்டி வைக்க வேண்டும்.**

ஏற்கனவே செய்முறைத் தேர்வில் பங்கேற்ற (present) மாணவர்களுக்கு மீண்டும் செய்முறைத் தேர்வு நடத்த வேண்டியதில்லை.

**மேற்குறிப்பிட்ட மாணவர்களுக்கு வழங்கப்படும் செய்முறைத் தேர்வு மதிப்பெண்களை பதிவு செய்வதற்கான மதிப்பெண் பட்டியல் படிவம் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. இத்தேர்வர்களுக்கு செய்முறைத் தேர்வில் வழங்கப்பட்ட மதிப்பெண்களை பதிவு செய்த மதிப்பெண் பட்டியல்களை தனி கட்டுக்களாக கட்டி அவற்றை அந்தந்த மாவட்டங்களில் உள்ள அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் 03.03.2020 அன்று ஒப்படைக்கவேண்டும்.**

மேலும், தங்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து மேல்நிலைப் பள்ளிகளிலும் செய்முறைத் தேர்வுகள் எவ்வித புகாருக்கும் இடமின்றி நடைபெறுவதை முதன்மைக் கல்வி அலுவலர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

**இணைப்பு:**

1. பிற்சேர்க்கை – I
2. Proforma – A
3. Proforma – B
4. செய்முறைத் தேர்வு நிறைவுற்றதற்கான சான்றிதழ்
5. +1 Arrear தேர்வர்கள் – செய்முறைத் தேர்வு படிவம்

ஒம்/ –
**இயக்குநர்**

**பெறுநர்:**

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
2. இணை இயக்குநர் கல்வி (அலுவலர்), புதுச்சேரி
3. அனைத்து மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள்/முதல்வர்கள்

– முதன்மைக் கல்வி அலுவலர் வழியாக

**நகல்:**

1. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்

   – தகவலுக்காகவும், உரிய நடவடிக்கைக்காகவும்
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.

**<u>மேல்நிலை முதலாம் ஆண்டு (+1) பொதுத் தேர்வு மார்ச் 2020</u>**

**<u>செய்முறைத் தேர்வுகளை நடத்துதல் தொடர்பான கால அட்டவணை</u>**

**பிற்சேர்க்கை – I**

| வ. எண் | பணி | பணியினை மேற்கொள்ள வேண்டிய நாட்கள் |
|---|---|---|
| **1.** | பள்ளித் தலைமையாசிரியர் / முதன்மை கண்காணிப்பாளர் பள்ளி மாணாக்கருக்கான செய்முறைத் தேர்வு மதிப்பெண்களை பதிவு செய்வதற்கான வெற்று மதிப்பெண் பட்டியலை இணையதளம் வாயிலாக பதிவிறக்கம் செய்து கொள்ளுதல் | **31.01.2020 முதல் 24.02.2020 வரை** |
| **2.** | செய்முறைத் தேர்வுகளை நடத்துதல் | **14.02.2020 முதல் 25.02.2020 வரை** |
| **3.** | பள்ளித் தலைமையாசிரியர் / முதன்மைக் கண்காணிப்பாளர் உரிய ஆவணங்களுடன் செய்முறைத் தேர்வுக்கான மதிப்பெண் பட்டியலை சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைத்தல் | **26.02.2020–க்குள்** |
| **4.** | முதன்மைக் கல்வி அலுவலர்கள் இணையதளம் வாயிலாக செய்முறைத் தேர்வு மதிப்பெண்களை பதிவேற்றம் செய்தல் | **17.02.2020 முதல் 27.02.2020 வரை** |
| **5.** | முதன்மைக் கல்வி அலுவலர்கள் மதிப்பெண் பட்டியலை சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைத்தல் | **03.03.2020** |

ஒம்/–
**இயக்குநர்**

